**DEPARTMENT OF INFORMATION AND PUBLICITY,**
**KARAIKAL**
*********

காரைக்கால், நாள் 09.02.2020

## செய்திக் குறிப்பு

கொரானா வைரஸ் காய்ச்சலை தடுக்க பொதுமக்கள் கீழ்க்காணும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதுகுறித்து காரைக்கால் மாவட்ட ஆட்சியர் திரு அர்ஜூன் சர்மா, இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்ததாவது:

கொரானா வைரஸ் என்பது மனிதர்களுக்கு சளி, இருமல், காய்ச்சல் மற்றும் மூச்சுத் திணறல் ஆகியவற்றை ஏற்படுத்த கூடிய ஒரு வகையான வைரஸ் கிருமி ஆகும். இந்த நோயின் அறிகுறிகள்; காய்ச்சல், இருமல் சளி, உடல் சோர்வு மற்றும் ஒரு சிலருக்கு மூச்சுத் திணறல் ஏற்படும். நோய் அறிகுறி கொண்ட நபர் இருமும்போதும், தும்பும்போதும் வெளிப்படும் எச்சில் நீர் திவலைகள் மூலம் நேரடியாக பரவுகிறது. மேலும் இருமல் மற்றும் தும்மல்மூலம் வெளிப்படும் கிருமிகள் கூடிய எச்சில் சளி நீர் திவலைகள் படிந்துள்ள பொருட்களை தொடும் பொழுது அதே கைகளால் முகத்தைத் தொடுவது மூலமாகவும் பரவுகிறது.

சீனா மற்றும் பாதிக்கப்பட்ட நாடுகளில் இருந்து விமானம் மற்ற்ம் கப்பல் மூலமாக வரும் பயணிகள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்; பயணிகள் தங்கள் பயணத்தின் போது நகரும் படிக்கட்டுகள், பயணச்சீட்டு வழங்கும் இடங்கள், கதவுகள், நாற்காலிகள், கைப்பிடிகள் இவைகளை தேவையின்றி தொடக்கூடாது. கிருமிநாசினி கொண்டு கைகளை அடிக்கடி சுத்தம் செய்து வேண்டும். வெளிநாட்டில் இருந்து வந்த உடன் தங்களை முழுமையாக மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்திக் கொள்ள வேண்டும்.

மேலும் 28 நாட்களுக்கு வீட்டிலேயே இருக்க வேண்டும். மற்றவர்களுடன் நெருங்கிப் பழகாமலும் மற்றும் பொது இடங்கள், சினிமா தியேட்டர்கள், பூங்கா, திருவிழா, குடும்ப விழாக்களுக்கு செல்வதை தவிர்ப்பது நல்லது. காய்ச்சல், சளி, இருமல் போன்ற உபாதைகள் ஏற்பட்டால் உடனடியாக தங்களிடம் தொடர்பில் உள்ள சுகாதார துறையினருக்கு தகவல் கொடுப்பதுடன் உடனடியாக அருகில் உள்ள அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக விரைந்து செல்ல வேண்டும்.

தினமும் 10 முதல் 15 முறைகள் கைகளை அடிக்கடி கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்ய வேண்டும். இருமல், தும்மல் வரும்பொழுது கைக்குட்டைகள் பயன்படுத்தக் கூடாது. டிஷ்யூ பேப்பர் பயன்படுத்தலாம். கைகளை கழுவாமல் கண், வாய், மூக்கு போன்றவற்றை தொடக்கூடாது. சர்க்கரை மற்றும் இரத்த கொதிப்பு அளவினை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். கைகுலுக்குதல், கட்டிப்பிடித்தல், போன்ற வணக்க முறைகளை தவிர்த்து இரு கைகூப்பி வணங்குதல் நன்று. காய்ச்சல், சளி உள்ளிட்ட உபாதைகள் ஏற்பட்டால் உடனடியாக அருகிலுள்ள அரசு மருத்துவமனைக்கு சென்று ஆலோசனை பெற வேண்டும்.

...2/-

பொதுவாக இக்காலகட்டத்தில் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களுக்கு செல்வதை தவிர்க்க வேண்டும். குறிப்பாக காய்ச்சல், சளி உள்ளிட்ட உபாதைகள் இருக்கும்போது அத்தியாவசியம் இல்லாமல் பொது இடங்கள், ~~சினிமா தியேட்டர்கள், பூங்கா, திருவிழா குடும்ப விழாக்கள்~~ செல்வதை தவிர்க்க வேண்டும்.

அனைத்து மருத்துவமனைகளிலும் கிருமிநாசினி கொண்டு சுத்தமாக துடைத்து பராமரித்தல் வேண்டும். காரைக்கால் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் இதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு தயார் நிலையில் உள்ளது. கொரானா நோயைப்பற்றி பொது மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. சமூக வலைத்தளங்களில் வரும் வதந்திகளை நம்ப வேண்டாம். சந்தேகம் ஏதேனும் இருந்தால் அருகில் உள்ள சுகாதார நிலையத்தை அணுகவும். மேலும் கொரானா தொடர்பான சந்தேகங்களுக்கு தொலைபேசி எண் 04368-261242 -ல் தொடர்பு கொள்ளலாம்.

கொரானா வைரஸ் தாக்குதலில் இருந்து உங்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள். முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பின்பற்றுங்கள். தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் காரைக்கால் மாவட்ட நிர்வாகம் எடுத்துள்ளது.

மேற்காணும் முறைகளை பொதுமக்கள் கடைப்பிடிப்பதன் மூலம் கொரானா உள்ளிட்ட அனைத்து விதமான காய்ச்சல் தொற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்ள முடியும். இவ்வாறு காரைக்கால் மாவட்ட ஆட்சியர் திரு அர்ஜூன் சர்மா, இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

Information & Publicity Department * Karaikal *

மாவட்ட ஆட்சியரின் செயலர்
காரைக்கால்